1973 ஆகஸ்ட் 13]

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, மதுரையிலே மட்டும் கவியரங்கம் நடப்பதாகச் சொன்னார்கள் இந்த சிறந்த திட்டத்தை தமிழ்நாட்டிலே இருக்கிற நிதிவசதி படைத்த எல்லா ஆலயங்களிலும் செயல்படுத்தி, கவிஞர் சமுதாயத்தை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் முதலில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பிறகு மற்ற ஆலயங்களிலும் இந்தத் திட்டத்தைப் புகுத்துவதுபற்றி யோசிக்கலாம்.

Incentives for production of honey.

* 123 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the details of the incentives provided in regard to the production of honey during 1971-72 and 1972-73 in this State ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் அரிசன நல நிதியிலிருந்து தனி உதவி பெறும் ஐந்து மாவட்டங்களை கதர்-கிராமத் தொழில் வாரியம் தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆனால் அதிகமாக தேன் உற்பத்தி செய்கின்ற கன்னியாகுமரி மாவட்டம் அதில் இடம் பெறவில்லை. எனவே, இந்தத் தனித் திட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திலும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்த தேன் சேகரிக்கின்ற திட்டம் எந்தெந்த முறையிலே நடத்தப்படுகிறது என்ற விபரம் இந்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம்.

@ 277–280-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 ஆகஸ்ட் 13

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, முன்னாலே ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக தேனீ வளர்ப்பவர்களுக்கு தேன் கூடுகளையும் கொடுத்து வேறு சில உதவிகளையும் செய்து வந்தார்கள். அதனால் சாதாரண கிராமத்து மக்கள் பல கூடு களிலிருந்து மாதம் ஒன்றுக்கு ஒரு படி, இரண்டு படி தேன் சேகரித்து வந்தார்கள். இப்போது அந்த உதவி செய்யும் திட்டத்தை எடுத்துவிட்டார்கள். ஆகவே தேனீ வளர்ப்பவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு, பழையபடி அந்த 'சப்சிடைஸ்ட் ஸ்கீமை' கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் தேனீ வளர்ப்பவர்களுக்கு அறிவியல் பயிற்சி கொடுத்து, தேனீக்களைப் பிடித்தல், பாது காத்தல், வளர்த்தல், சேகரித்தல் போன்றவைகளில்-தேனீ கூடுகளை அவர்களுக்குப் பாதி விலையில் கொடுக்கப்பட்டு வருகிறது. ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் இத்திட்டத்தைச் சரியானபடி செயல்படுத்த முடியவில்லை என்று கருதியதால்தான் கதர்-கிராமத் தொழில் வாரியம் ஏற்று நடத்துகின்றது. எதிர்காலத்தில் விரிவாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இந்த 'பீ-பீல்டுமேன்' என்று சொல்லக் கூடிய ஒரு அதிகாரியை மறுமுறையும் நியமித்து இந்தத் திட்டத்தை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே சில ஊராட்சி ஒன்றியங்களிலேதான் இந்த தேனீ வளர்ப்புப் பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டு வந்தார்கள். ஊராட்சி ஒன்றியத்தோடு இணைக்கப்பட்டுள்ள நேரத்தில் சில நிர்வாகச் சிக்கல்கள் காரணமாகச் சரியான முறையிலே பணியாற்றவில்லை என்ற கருத்தை வைத்துத்தான் அந்தப் பணியிலே இருந்து அவர்கள் எடுக்கப்பட்டு கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் சார்பிலே இப்பொழுது பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். இந்த முறையைப் பின்பற்றி மேலும் விஸ்தரிப்பதற்கான வகையில் ஏற்பாடுகளைச் செய்யலாம்.

1973 ஆகஸ்ட் 13]

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, தேன் உற்பத்திக்காக காதி போர்டு செயல்படுத்துகின்ற 5 திட்டங்களில் 1972-73-ல் கால்ராயன் மலைத் திட்டம் தவிர மற்ற 4 திட்டங்களிலேயும் குறைந்த உற்பத்தி காண்கிறோம். அதற்கான காரணங்களைக் கண்டறிந்து உற்பத்தியைப் பெருக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

5. ஒத்திவைப்புத் தீர்மானம்

வயது வந்த பள்ளிக் குழந்தைகள் காணாமற் போவதாகப் பத்திரிகையில் வந்த செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள்
'That many teen-aged school children in Madurai and some places like Samayanallur were found to be missing or absconding during the last week. It appears that there seems to be several cases of lost children which has not been reported to the Police.' என்ற பொருள்பற்றி விவாதிக்க, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தக்க அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I have given notice of the following motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules: "The House do stand adjourned to discuss about an urgent matter of public importance, namely, that many teen-aged school children in Madurai and some place like Samayanallur were found to be missing or absconding